# ஜெயங்கொண்டம் நகராட்சி

| DATE OF MEETING OF THE COUNCIL | MCR NO | SERIAL NUMBER AND SUBJECT IN AGENDA | DECISION OF THE COUNCIL |
|---|---|---|---|
| | | ஜெயங்கொண்டம் நகராட்சியில் 2021 ஆம் ஆண்டு 1 செப்டம்பர் மாதம் 13.09.2021 ஆம் தேதி திங்கட் கிழமை காலை **11.00** மணி அளவில் நடைபெற்ற சாதாரண கூட்டத்தின் நடவடிக்கை,<br><br>தனி அலுவலர்,<br>ஜெயங்கொண்டம் நகராட்சி. | |
| 13.09.2021 | 413 | **பொருள் : 1**<br>ஜெயங்கொண்டம் நகராட்சி பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பிடம் சேதமடைந்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு ஏதுவாக இல்லாத காரணத்தினால் அதனை சரிசெய்ய மற்றும் புதியதாக செப்டிக் டேங் அமைக்கும் பணி மேற்கொள்ள ஆகும் தோராய மதிப்பீட்டுத் தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>மேற்கண்ட செலவினத்தினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>**ந.க.எண். 4444 / 2021 / இ1** | அனுமதிக்கப்பட்டது |
| 13.09.2021 | 414 | **பொருள் : 2**<br>ஜெயங்கொண்டம் நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்களை 2018-2021 முடிய மூன்று ஆண்டுகளுக்கு ஏலம் விடப்பட்டு ஏலம் கோரப்பட்ட குத்தகைதாரர்களுக்கு குத்தகை இனங்களை மூன்று ஆண்டுகளுக்கு நடத்திக்கொள்ள உத்திரவு வழங்கப்பட்டது. குத்தகை காலம் 31.03.2021 ம் தேதியுடன் முடிவடைந்ததால் அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு2021-2024 ஏலம் கோர கோவிட் 19 தொற்று நடைமுறையில் உள்ளதனால் ஏலம் கோர இயலவில்லை. ஏனவே மறு ஏலம் கோரும் வரை 08.04.2021 ம் தேதியில் மன்ற முன் அனுமதி பெறப்பட்டதனை ஏற்று 01.04.2021 முதல் கால நீட்டிப்பு செய்து 2018-2021 ம் ஆண்டிற்கு குத்தகை உரிடம் வழங்கப்பட்ட குத்தகை தாரர்களுக்கு நடத்திக்கொள்ள உத்திரவு வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வேண்டப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு :**<br>2018-2021 ம் ஆண்டிற்கு குத்தகை உரிமம் வழங்கப்பட்ட குத்தகை தாரர்களுக்கு கால நீட்டிப்பு செய்து மறு உத்திரவு வழங்கும் வரை குத்தகை இனங்களை நடத்திக்கொள்ள உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்:138/2018/அ1** | அனுமதிக்கப்பட்டது |
| 13.09.2021 | 415 | **பொருள் : 3**<br>ஜெயங்கொண்டம் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் புதியதாக கட்டப்பட்ட கடைகள், மற்றும் கீழ்கண்ட இனங்களுக்கு, ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி கோர மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 138/ 2018 / அ1** | அனுமதிக்கப்பட்டது |